# புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி

# 2023–2024 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## அமைப்பும் மேலாட்சியும்

### 1) ஆட்சி எல்லை:

புன்செய் புளியம்பட்டி நகராட்சியானது 1–10–2004–ம் தேதி முதல் (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண்.301,நாள் 24.9.2004–ன் படி) மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு பின்னர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு ஆணை எண்.154, நாள் 9.8.2010–ன், படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நகராட்சி, புன்செய்ப் புளியம்பட்டி வருவாய் கிராமத்தில் அடங்கியுள்ளது. நடப்பாண்டில் இதன் எல்லையில் மாறுதல் ஏதுமில்லை. இதன் பரப்பளவு 4.54 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்ட பின் பொறுப்பேற்றுக்கொண்ட செயல் அலுவலர்கள் மற்றும் ஆணையாளர்களின் பெயர் மற்றும் பதவி காலம் பின்வருமாறு**

| வ.எண். | நகராட்சி ஆணையாளர்கள் | பதவிகாலம் |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.தேவா, செயல் அலுவலர்(பொ) | 09.08.2010 முதல் 15.12.2010 |
| 2 | திரு.வே.கிருஷ்ணகுமார்,DCE, பொறியாளர்(பொ) | 16.12.2010 முதல் 15.06.2011 |
| 3 | திரு.இரா.செந்தில்குமார், பொறியாளர்(பொ) | 16.06.2011 முதல் 13.11.2011 |
| 4 | திரு.எஸ்.சுந்தரமூர்த்தி(பொ) | 14.11.2011 முதல் 07.02.2012 |
| 5 | திரு.எம்.கணேசன், பொறியாளர்(பொ) | 08.02.2012 முதல் 24.04.2012 |
| 6 | திருமதி.கு.தனலட்சுமி, M.sc, M.phil(பொ) | 25.04.2012 முதல் 12.08.2012 |
| 7 | திரு.கே.செந்தில்வேல் | 13.08.2012 முதல் 18.08.2014 |
| 8 | திரு.கே.சரவணகுமார், BBA, BL(பொ) | 19.08.2014 முதல் 14.09.2014 |
| 9 | திரு.கே.செந்தில்வேல் | 15.09.2014 முதல் 17.11.2014 |
| 10 | திரு.ஜி.இளங்கோவன், BE பொறியாளர்(பொ) | 18.11.2014 முதல் 05.12.2014 |

| | | |
|---|---|---|
| 11 | திரு.கே.சரவணகுமார், BBA, BL(பொ) | 06.12.2014 முதல் 01.02.2015 |
| 12 | திரு.சு.சு.சுரேஷ்குமார் | 02.02.2015 முதல் 26.08.2016 |
| 13 | திரு.அ.ரவி, ME, பொறியாளர்(பொ) | 27.08.2016 முதல் 29.12.2016 |
| 14 | திரு.ந.தட்சணமூர்த்தி, B.Com | 30.12.2016 முதல் 08.03.2019 |
| 15 | திரு.A.தாணுமூர்த்தி(பொ) | 09.03.2019 முதல் 02.09.2019 |
| 16 | திரு.மு.சிவக்குமார், பொறியாளர்(பொ) | 03.09.2019 முதல் 08.03.2020 |
| 17 | திரு.ம.முத்துகுமார், பி.காம்., | 09.03.2020 முதல் 14.08.2020 |
| 18 | திரு.மு.சிவக்குமார், பொறியாளர்(பொ) | 15.08.2020 முதல் 22.02.2021 |
| 19 | திரு.எம்.கே.பழனிச்சாமி, BE பொறியாளர்(பொ) | 23.02.2021 முதல் 08.06.2021 |
| 20 | திருமதி.R.அமுதா, பி.எஸ்.சி, பி.எட்(பொ)., | 09.06.2021 முதல் 03.10.2021 |
| 21 | திரு.மு.சக்திவேல், பி.எஸ்.சி., | 04.10.2021 முதல் 21.08.2022 |
| 22 | திரு.அ.செய்யது உசேன் | 22.08.2022 முதல் 30.05.2023 |
| 23 | திருமதி. சி.கவிதா, B.E., பொறியாளர்(பொ) | 31.05.2023 முதல் 05.06.2023 |
| 24 | திரு.வ.செல்வம், (கூ.பொ) | 06.06.2023 முதல் 29.02.2024 |
| 25 | திரு.J.பிரான்ஸ்சேவியர் | 01.03.2024 முதல் 03.03.2024 |
| 26 | திரு.அ.ஜ.முகம்மது சம்சுதீன் | 04.03.2024 முதல் 31.03.2024 |

## 2) மக்கள் தொகை

2011–ம் ஆண்டில் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சி பகுதியில் வசித்து வந்த மக்கள் தொகை 18967 ஆகும். இதில், ஆண்கள் 9470 பெண்கள் 9497.

## 3) மன்றம்

இந்நகராட்சி 18 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

இந்நகர்மன்றத்தின் 18 வார்டுகளில் தாழ்த்தப்பட்ட பிரிவு, பொது மற்றும் பெண்கள், பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் விபரம்

| மொத்த வார்டுகள் | தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் (பொது) | தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் (பெண்கள்) | பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வார்டுகள் (பொது) | பொதுவான வார்டுகள் |
|---|---|---|---|---|
| 18 | 12,17 | 3,13 | 2,4,6,7,14,16,18 | 1,5,8,9,10,11,15 |

இந்நகர்மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் அவர்கள் தேர்தலில் போட்டியிட்ட கட்சி விவரங்கள் கீழ்க்கண்டவாறு:-

**நகர் மன்ற தலைவர். திரு.தி.ஜனார்த்தனன் (தி.மு.க)**

| வ.எண் | வார்டு எண். | வெற்றி பெற்ற வேட்பாளரின் பெயர் | கட்சி |
|---|---|---|---|
| 1 | 1 | திரு.பி.ஏ.சிதம்பரம் | திமுக |
| 2 | 2 | திருமதி.ஜி.நந்தினி | திமுக |
| 3 | 3 | திருமதி.மு.கோகிலாமணி | திமுக |
| 4 | 4 | திருமதி.ப.துளசிமணி | சுயேச்சை |
| 5 | 5 | திரு.பி.கே.வெங்கடாச்சலம் | இந்திய தேசிய காங்கிரஸ் |
| 6 | 6 | திருமதி.மு.சுதா | திமுக |
| 7 | 7 | திருமதி.ஈ.பரிமளம் | திமுக |
| 8 | 8 | திரு.சு.இப்ராம்ஷா | திமுக |
| 9 | 9 | திரு.வெ.பூர்ணராமச்சந்திரன் | சுயேச்சை |
| 10 | 10 | திரு.அ.முரளிகிருஷ்ணன் | சுயேச்சை |
| 11 | 11 | திரு.எ.துரைசாமி | இந்திய தேசிய காங்கிரஸ் |
| 12 | 12 | திரு.தி.ஜனார்த்தனன் | திமுக |
| 13 | 13 | திருமதி.சரோஜா | திமுக |
| 14 | 14 | திருமதி.த.தனலட்சுமி | திமுக |
| 15 | 15 | திரு.அ.சிவசண்முகம் | திமுக |
| 16 | 16 | திருமதி.ச.புவனேஷ்வரி | அதிமுக |
| 17 | 17 | திரு.கு.சதீஷ் | திமுக |
| 18 | 18 | திருமதி.ச.கிரிஜா | சுயேச்சை |

தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய சட்டப்பூர்வ செய்தி வெளியீடு நாள். **26.01.2022**ன்படி **04.03.2022**அன்று நடைபெற்ற நகர்மன்றத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் தேர்தலில் திரு.தி.ஜனார்த்தனன் அவர்கள் தலைவராகவும் திரு.பி.ஏ.சிதம்பரம் அவர்கள் துணைத் தலைவராகவும் தேர்வு செய்யப்பட்டு பொறுப்பேற்று பணியாற்றி வருகிறார்கள்.

குழு உறுப்பினர்கள் விபரம்:–

| குழுவின் பெயர் | குழு உறுப்பினர்கள் |
|---|---|
| அ. நியமனக்குழு | திருமதி.ஈ.பரிமளம் |
| ஆ.ஒப்பந்தக்குழு | திரு.அ.சிவசண்முகம் |
| இ.வரிமேல்முறையீட்டுக்குழு | திரு.சு.இப்ராம்ஷா |
| | திருமதி.மு.சுதா |
| | திருமதி.மு.கோகிலாமணி |
| | திருமதி.த.தனலட்சுமி |

## 4) கூட்டங்கள்

அறிக்கையாண்டில் **01.04.2023–ம்** தேதி முதல் **31.03.2024–ம்** தேதி வரை நகர்மன்ற தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட அவசரக்கூட்டம் 5, சாதாரணக்கூட்டம் 7 என மொத்த கூட்டங்கள் 12 ஆகும் தீர்மானம் 190 ஆகும்.

## 5. ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள்.

1) திரு.அ.செய்யது உசேன், ஆணையாளர் அவர்கள் 01.04.2023 முதல் 30.05.2023 ஆம் தேதி வரை இந்நகராட்சியில் ஆணையாளராக பணிபுரிந்து வந்தார்.
2) திருமதி.சி.கவிதா, பொறியாளர் (பொ) அவர்கள் 31.05.2023 முதல் 05.06.2023 ஆம் தேதி வரை இந்நகராட்சியில் ஆணையாளராக (பொ) பணிபுரிந்து வந்தார்.
3) திரு.வ.செல்வம், நகராட்சி ஆணையாளர் (கூ.பொ) அவர்கள் 06.06.2023 முதல் 29.02.2024 ஆம் தேதி வரை இந்நகராட்சியின் ஆணையாளராக (கூ.பொ) பணிபுரிந்து வந்தார்.
4) திரு.J.பிரான்ஸ்சேவியர் ஆணையாளர் அவர்கள் 01.03.2024 முதல் 03.03.2024 ஆம் தேதி வரை இந்நகராட்சியில் ஆணையாளராக பணிபுரிந்து வந்தார்.
5) திரு.அ.ஜ.முகம்மது சம்சுதீன் ஆணையாளர் அவர்கள் 04.03.2024 முதல் 31.03.2024 ஆம் தேதி வரை இந்நகராட்சியில் ஆணையாளராக பணிபுரிந்து வந்தார்.

## 6) மேலாளுகை

அரசாணை (நிலை) எண். 10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப1) துறை நாள்.23.01.2023 ன்படி கீழ்க்கண்டவாறு பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## பொதுப்பிரிவு

| | | |
|---|---|---|
| 1 | மேலாளர் (வகுப்பு IV) | 1 |
| 2 | கணக்கர் (வகுப்பு (V) | 1 |
| 3 | உதவியாளர் (வகுப்பு V) | 1 |
| 4 | இளநிலை உதவியாளர் | 5 |
| 5 | தட்டச்சர் | 1 |
| 6 | வருவாய் ஆய்வாளர் | 1 |
| 7 | வருவாய் உதவியாளர் | 3 |
| 8 | பதிவறை எழுத்தர் | 1 |
| 9 | அலுவலக உதவியாளர் | 3 |
| 10 | துப்புரவு ஆய்வாளர் | 1 |
| 11 | களப்பணி உதவியாளர் | 1 |
| 12 | தூய்மை பணி மேற்பார்வையாளர் | 4 |

## காலாவதியாகும் (Lapsed) பொதுப்பிரிவு பணிகள்

| | | |
|---|---|---|
| 1 | புள்ளி விவரக் குறிப்பாளர் | 1 |
| 2 | பூங்கா காவலர் | 1 |
| 3 | சந்தை காவலர் | 1 |
| 4 | ஓட்டுநர் | 1 |
| 5 | தூய்மை பணியாளர் | 42 |

## நகரமைப்பு பிரிவு

| | | |
|---|---|---|
| 1 | நகரமைப்பு ஆய்வாளர் | 1 |

## குடிநீர் பிரிவு

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் (நிலை 3) | 1 |
| 2 | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 |
| 3 | பணி ஆய்வாளர் | 2 |
| 4 | படவரைவாளர் (நிலை 3) | 1 |
| 5 | மின் பணியாளர் (நிலை 2) | 1 |
| 6 | குழாய் பொருத்துனர் நிலை 2 | 1 |

## காலாவதியாகும் பொறியியல் பணிகள்

| | | |
|---|---|---|
| 1 | தெரு விளக்கு மின் பணியாளர் | 1 |
| 2 | குழாய் திறப்புநர் (டர்ன் கார்க்) | 1 |
| 3 | ஓட்டுநர் | 1 |
| 4 | தெரு விளக்கு மின் உதவியாளர் | 1 |

## 7. இட வசதிகள்

இந்நகராட்சிக்கு சொந்தமான அலுவலக கட்டிடமானது ஜவஹர் மெயின் ரோடு சாலையில் சர்வே எண்.242/1–ல் பேருந்து நிலையம் அருகில் கடந்த 1970–ஆம் ஆண்டு கட்டப்பட்டு தற்போது வரை செயல்பாட்டில் இருந்து வருகிறது. இவ்வலுவலகத்தின் மொத்த பரப்பளவு 4500.00 சதுரமீட்டர் ஆகும். அதில் 860.00 சதுர மீட்டர் பரப்பளவில் அலுவலக கட்டிடம் செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள 3640.00 சதுர மீட்டர் பரப்பளவு இடமானது காலியாக உள்ளது. மேற்படி கட்டிடம் கட்டப்பட்டு 52 ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தாலும், நகர்மன்றகூடம், பொதுப்பிரிவு, பொறியியல்பிரிவு, நகரமைப்புபிரிவு, மற்றும் பொதுசுகாதாரபிரிவு ஆகிய பிரிவுகள் திறம்பட செயல்பட போதிய இருக்கை வசதிகள் அமைக்க அலுவலக கட்டிடத்தில் போதுமான இடவசதி இல்லை. தற்போழுது உள்ள அலுவலக கட்டிடத்தின் மேற்கூரை மற்றும் பக்கச்சுவர்களில் மழை காலங்களில் தண்ணீர் கசிந்து விரிசல்கள் ஏற்பட்டு வருகிறது.

மேற்படி அலுவலக கட்டிடம் 2004ல் மூன்றாம் நிலை நகராட்சியாக இருந்து 2010ஆம் ஆண்டு இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னரும் புதிய கட்டிடம் கட்டப்படாமல் பழைய கட்டிடத்திலேயே செயல்பட்டு வருகிறது. எனவே பணியாளர்களின் வசதி மற்றும் பொதுமக்களின் சேவை ஆகியவற்றினை கருத்தில் கொண்டு இக்கட்டிடம் மிகவும் பழமையாக உள்ளதாலும், நகரின் வளர்ச்சிக்கேற்ப அலுவலக கட்டிடத்தை இடித்துவிட்டு புதிதாக ரூ.462.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அலுவலக கட்டிடம் அரசு மானியமாக வழங்க கடிதம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.684/2022/இ1 நாள்.15.05.2024 ன்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

## 8. வழக்குகளும் இதரச் செலவுகளும்

1) வருட ஆரம்பத்தில் நிலுவையில் உள்ள வழக்குகள் விபரம் – 13
2) நடப்பு ஆண்டில் தொடரப்பட்டவை – –
3) முடிக்கப்பட்டவை – –
4) நிலுவையாக உள்ள வழக்குகள் – 13

நிலுவையில் உள்ள வழக்குகளை முடிவுக்குக் கொண்டுவர துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**9. தணிக்கை**

அறிக்கையாண்டின் தணிக்கைத் தடைகள் கீழ்க்கண்டவாறு நிலுவையாக உள்ளன.

**<u>நிலுவையில் உள்ளவை</u>**

| | | |
|---|---|---|
| சாதா பத்திகள் | – | 173 |
| சிறப்பு பத்திகள் | – | 63 |

நிலுவையிலுள்ள 236 பத்திகளையும், தடைநீக்கம் செய்யும் பொருட்டு இளநிலை உதவியாளர் மற்றும் துறைத் தலைமை அலுவலர்கள் வாயிலாக தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**10. அச்சடித்தல்**

அலுவலகத்திற்கு தேவையான படிவங்களும், புத்தகங்களும் நகரில் உள்ள மாவட்ட கூட்டுறவு அச்சகங்கள் மூலம் அச்சடித்துப் பெறப்பட்டது.

# 2. பொறியியல் மற்றும் குடிநீர்பணிகள்

## பொறியியல் பிரிவு

### 1) பணியாளர்கள்

பொறியியல் பிரிவு தொடர்பாக அனைத்து பணிகளையும், நகராட்சிப் பொறியாளர் மேற்பார்வை செய்து வருகிறார். துறை தொடர்பாக கட்டப்படும் கட்டிடங்கள் கட்டும் பணிகள், சாலைகள் , தெரு விளக்குகள், குடிநீர் குழாய் இணைப்பு, பராமரிப்பு, தலைமை நீரேற்று நிலையம் மற்றும் அண்ணா நகர் நீருந்து நிலைய பராமரிப்பு பணிகள் ஆகியவற்றை பொதுப்பணி மேற்பார்வையாளர் பார்த்து வருகிறார்.

### அறிக்கையாண்டில் நகராட்சி பொறியாளர்

1. திருமதி.சி.கவிதா, நகராட்சி பொறியாளராக 01.04.2023 முதல் 18.08.2023 வரை பணிபுரிந்து வந்தார்.
2. திருமதி. ஜீ. காளீஸ்வரி, நகராட்சி பொறியாளராக 28.08.2023 முதல் 14.03.2024 வரை பணிபுரிந்து வந்தார்.
3. திருமதி.சி.கவிதா, நகராட்சி பொறியாளராக 15.03.2024 முதல் 31.03.2024 வரை பணிபுரிந்து வந்தார்.

### 2. சாலைகள்

அ. இந்நகர எல்லைக்குள், யாதொரு நெடுஞ்சாலையும், நகர்மன்றப் பராமரிப்பில் இல்லை. இந்நகராட்சியில் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் 41.01 கிலோ மீட்டர் ஆகும். இதன் விபரம்.

| | | |
|---|---|---|
| 1) தார்ரோடு | -- | 29.03 கிலோ மீட்டர் |
| 2) பேவர் பிளாக் | -- | 2.25 கிலோ மீட்டர் |
| 3) சிமெண்ட் ரோடு | -- | 9.61 கிலோ மீட்டர் |
| 4) மண் ரோடு | -- | 0.12 கிலோ மீட்டர் |
| **மொத்தம்** | -- | **41.01 கிலோ மீட்டர்** |

**<u>3. பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம்</u>**

இந்நகராட்சி பாதுகாக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிப்புத் திட்டம் தலைமை நீரேற்று நிலையம் நகரத்திலிருந்து 17 கி.மீ. தொலையில் உள்ள பவானிசாகர் LBP பிரதான வாய்க்காலில் குடிநீர் எடுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. குடிநீர்த் திட்டம் 1973–ம் ஆண்டிலிருந்து 60 குதிரைத்திறன் மோட்டாரின் மூலம் மேல்நிலைத் தொட்டிகளுக்கு நேரடியாக விநியோகம் செய்யப்பட்டு வந்தது. 2001–2002–ம் ஆண்டில் ஈரோடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் 5 கோடியே 64 லட்சத்தில் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 23.1.2003–ம் தேதி முதல் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

தலைமை நீரேற்று நிலையத்தில் சுத்திகரிக்கப்படாத தண்ணீர் விநியோகத்திற்கு 60 குதிரைத்திறன் மின் இணைப்பும், சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் மற்றும் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் 60 குதிரைத்திறன், 70 குதிரைத்திறன் ஆக மூன்று மின் இணைப்புகள் பெறப்பட்டுள்ளன. நிதியாண்டில் மின் கட்டணம் ரூ.90.00 லட்சம் செலுத்தப்பட்டுள்ளது.

LBP பிரதானவாய்க்காலில் இருந்து சுத்திகரிக்கப்படாத தண்ணீர் 3 மீட்டர் விட்டமும், 10 மீட்டர் ஆழமும் கொண்ட தண்ணீர் சேகரிப்பு கிணற்றிலிருந்து 40 எச்.பி.டர்பைன் மோட்டார், 30 எச்.பி. மானோசப்மர்சிபிள் மோட்டார் மூலமும் 10'' விட்டமுள்ள குடிநீர் குழாய் மூலம் அருகில் 250 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 16.00 லட்சம் லிட்டர் தினசரி நீரேற்றம் செய்யப்படுகிறது. சுத்திகரிக்கப்படாத தண்ணீர் ஆலம் மற்றும் பிளீச்சிங் பவுடர் ஆகிய கிருமி நாசினிகள் கலக்கப்பட்ட கிளோளிடையர் மூலம் நான்கு வடிதள தொட்டிகள் (4 x 3 x 2 Meter Sand Filter bed) மூலம் 3.25 லட்சம் (ம) 2.00 லட்சம் கொள்ளளவு கொண்ட நீர் சேகரிப்புத் தொட்டியில் சேகரிக்கப்படுகிறது. 60 எச்.பி. குதிரைத்திறன், மற்றும் 50 எச்.பி. குதிரைத்திறன் மின் மோட்டாரின் மூலம் 12, 10'' பிரதான குழாய்களின் மூலம் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீர் அண்ணா நகர் நீருந்து நிலையத்தில் 1.90 லட்சம் கொள்ளளவு கொண்ட குடிநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட்டு 25 குதிரைத்திறன் மின் இணைப்பு பெற்று நீருந்து நீரேற்று நிலையத்திலிருந்து 15 எச்.பி. மின் மோட்டார் மூலம் புன்செய் புளியம்பட்டி நகரில் உள்ள நீர்த்தேக்க தொட்டி மூலம் நிரப்பப்பட்டு, சராசரியாக தினசரி 22 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. நிதியாண்டில் மின் கட்டணம் ரூ.9.00 லட்சம் செலவிடப்பட்டது.

ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் 2013–2014 –ன் கீழ் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் அண்ணா நகர் நீருந்து நிலையங்களில் ரூ. 142.00 லட்சத்தில் 2 லட்சம் லிட்டர் கொள்ளவில் நீர் தேக்க தொட்டி கட்டப்பட்டு மின் மோட்டார்கள் மாற்றப்பட்டு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4. மேல்நிலைத்தொட்டிகள்

| | | |
|---|---|---|
| 1. | திரு.வி.க. தெரு | 6.75 லட்சம் லிட்டர் |
| 2. | வாரச்சந்தை | 2.50 லட்சம் லிட்டர் |
| 3. | இராமநாதபுரம் | 1.00 லட்சம் லிட்டர் |
| 4. | செங்குந்தபுரம் | 0.30 லட்சம் லிட்டர் |
| 5. | காந்திநகர் | 0.30 லட்சம் லிட்டர் |
| 6. | ஜெ. ஜெ. நகர் | 0.30 லட்சம் லிட்டர் |
| 7. | இந்திரா நகர் | 0.30 லட்சம் லிட்டர் |

நகருக்கு வரும் பிரதான குடிநீர் குழாய் இணைப்புகளில் கிராம ஊராட்சிப் பகுதிகளில் கீழ்க்கண்ட கிராமங்களில் குடிநீர் விநியோகம் செய்ய பகிர்மானக் குழாய்களில் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. **தற்போது AMRUT 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் திட்ட அபிவிருத்திப் பணிகள் 52.07 கோடி மதிப்பீட்டில் தற்பொழுது நடைபெற்று வருகிறது. பணிகள் முழுவதும் முடிவுற்ற பின்பு தினசரி குடிநீர் வழங்கப்படும்.**

## 5. தண்ணீர் விநியோகம் செய்யப்படும் வழியோர கிராமங்கள்

1. தொப்பம்பாளையம் (கோடேபாளையம், நால்ரோடு)
2. பனையம்பள்ளி
3. மாதம்பாளையம் (தாசம்பாளையம், கணக்கரச ம்பாளையம்)
4. நல்லூர்

நகராட்சி பகுதியில் 119 பொது குடிநீர் குழாய்கள், 5488 வீடு மற்றும் வணிக குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு சீராக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

இவை தவிர 15 கிணறுகள் வாயிலாகவும், 32 ஆழ்குழாய் கிணறுகள் மூலம் மின் விசைப்பம்புகள் பொருத்தப்பட்டு தண்ணீர் பொது விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

## 6. தெரு விளக்குகள்

நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெரு விளக்குகள் 11/2014 முதல் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | LED | -- | 952 |
| 2. | சோடியம் | -- | 86 |
| 3. | CFL | -- | 104 |
| 4. | Flurescent Tube Light | -- | 110 |
| 5. | 16m High Mast Light | -- | 2 |
| 6. | Others | --- | 45 |
| | **மொத்தம்** | -- | **1299** |

மின்சார சேமிப்பிற்காக LED விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

அறிக்கையாண்டில் தெரு விளக்குகள் பராமரிப்பிற்காக, மின் வாரியத்திற்கு ரூ. 11.07 இலட்சம் கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

## 7.பணிகள்

**அறிக்கையாண்டில் பணிகளின் விபரம் பின்வருமாறு**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | **அம்ரூத் 2.0 2023-2024**<br>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18, சர்வே எண்.15/1-ல் உள்ள இடத்தில் ஏற்கனவே உள்ள நீர்நிலையை புனரமைப்பு செய்தல் பணி | 9.00 |
| 2 | **SPECIAL ASSISTANCE TO STATES FOR CAPITAL INVESTMENT FOR THE YEAR 2023-2024**<br>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி - புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14, பேருந்து நிலையம் பின்புறம் உள்ள நூலகத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல் பணி | 22.00 |
| 3 | **பள்ளி மேம்பாட்டு மானியம் - மூலதன பணி(Capital Work) 2023-2024**<br>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு நகராட்சி துவக்கப்பள்ளியில் புதிதாக 2+2 வகுப்பறைகள் மற்றும் கழிப்பறை கட்டுதல் பணி | 83.00 |

| | | |
|---|---|---|
| 4 | **பள்ளி மேம்பாட்டு மானியம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி (O&M Work) 2022-2023** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு நகராட்சி துவக்கப்பள்ளியில் ஏற்கனவே உள்ள பழைய வகுப்பறைகளை புனரமைப்பு செய்தல், பள்ளியை சுற்றி புதிதாக சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் புதிய நுழைவு வாயில் கதவு பொருத்துதல் பணி | 8.50 |
| 5 | **பள்ளி மேம்பாட்டு மானியம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி (O&M Work) 2022-2023** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான இராமநாதபுரம் நகராட்சி துவக்கப்பள்ளியில் ஏற்கனவே உள்ள பழைய வகுப்பறைகளை புனரமைப்பு செய்தல் பணி | 4.75 |
| 6 | **பள்ளி மேம்பாட்டு மானியம் இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி (O&M Work) 2022-2023** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜெ.ஜெ.நகர் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள சமையற்கூடம் புனரமைத்தல் மற்றும் பள்ளியை சுற்றி புதிதாக சுற்றுச்சுவர் கட்டுதல் பணி | 17.00 |
| 7 | **15வது மத்திய நிதிக்குழு மானியம் 2023-2024 மற்றும் 2024-2025 (Untied Grant)** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 16 தார்சாலையை புதுபித்தல் பணி | 69.00 |
| 8 | **பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித்திட்டம் 2021-2022** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.07, காளமேகம் தெருவில் புதிதாக அங்கன்வாடி மையம் கட்டுல் பணி | 12.00 |
| 9 | **15வது மத்திய நிதிக்குழு மானியம் 2023-2024 (Tied Grant)** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குப்பைகளை எரிப்பதற்காக 2 மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட புதிய Incinerator பொருத்துதல் பணி | 20.00 |
| 10 | **15வது மத்திய நிதிக்குழு மானியம் 2023-2024 (Tied Grant)** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குப்பைகளை எரிப்பதற்காக தளம் மற்றும் மேற்கூரை அமைத்தல் பணி | 19.00 |
| 11 | **15வது மத்திய நிதிக்குழு மானியம் 2023-2024 (Tied Grant)** புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு புதிதாக Baling machine கொள்முதல் செய்தல் பணி | 3.00 |

# பொது சுகாதாரம்

## நகரநல அமைப்புப் பணியாளர்கள்

புன்செய் புளியம்பட்டி நகராட்சி 4.54 சதுர கி.மீ பரப்பளவில் 18 நகர்மன்ற வார்டுகள், 23120 மக்கள் தொகையில், 7333 குடியிருப்புகளும் 620 வணிக கூடங்களும், 5 நூற்பாலைகளும், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி–1, அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி–1, **நகராட்சி** தொடக்கப்பள்ளி –2, தனியார் மெட்ரிக் உயர்நிலைப் பள்ளி –1, தனியார் நடுநிலைப்பள்ளி –1, **மொத்த** 6 பள்ளிகளும், ஒரு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் , 6 தனியார் மருத்துவமனைகளும், 4 சிறிய மருத்து கூடங்களும், ஒரு நகராட்சி திருமண மண்டபம், ஒரு சமுதாய கூடம், 6 தனியார் திருமண மண்டபம், 1 திரையங்கம், ஒரு வாரச்சந்தை, ஒரு தினசரி சந்தை, மாட்டு சந்தை எனவும், காவல் நிலையம், அஞ்சலம், பத்திர பதிவு அலுவலகம், வருவாய் ஆய்வர் **அலுவலகம், தமிழ்நாடு மின்சார வாரியம்,** கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் என அனைத்து வசதிகளின் கூடிய நகரமாக புன்செய் புளியம்பட்டி நகரம் அமைந்துள்ளது.

## மனித சத்தி (Man Power)

1. துப்புரவு ஆய்வாளர் – 1
2. ஓட்டுநர் – 1
3. **களப்பணியாளர் உதவியாளர்** – 1
4. துப்புரவு மேற்பார்வையாளர் – 4
5. துப்புரவு பணியாளர்கள் – 28
6. பொது சுகாதார தனியார் மயமாக்கல் துப்புரவு பணியாளர்கள் – 41

## இயந்திர சக்தி (Machine Power)

| | |
|---|---|
| 1 | பேட்டரியல் இயங்கும் வாகனம் – 14 |
| 2 | கழிவு நீர் வாகனம் – 1 |
| 3 | **மினி லாரி** - 1 |
| 4 | LCV - 4 |

மேற்கண்ட மனித மற்றும் இயந்திர சக்தி கொண்டு புன்செய் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் தினமும் 7 மெட்ரிக் டன் திடக்கழிவு சேகரம் செய்து அப்புறப்படுத்தப்படுகிறது. வீடு வீடாக குப்பை சேகரம் செய்யும் பணி 100 சதவீதம் மேற்கொள்ளப்பட்டு திடக்கழிவுகள் மக்கும் குப்பை மக்காத குப்பை என பிரிக்கப்படுகிறது.

நாள்தோறும் சேகரிக்கப்படும் திடக்கழிவுகளின் சராசரி அளவு (kg)

| | | |
|---|---|---|
| 1 | வீடுகள் தெருக்களில் சேகரம் செய்யும் திடக்கழிவு அளவு | 4000 |
| 2 | வணிக கூடங்கள் மற்றும் பிரதான சாலையில் சேகரம் செய்யும் குப்பையின் அளவு | 2000 |
| 3 | தினசரி சந்தையில் சேகரம் செய்யும் குப்பையின் அளவு | 250 |
| 4 | பள்ளிகள் – தொழிற்சாலைகள் இதர அலுவலகங்களில் சேகரம் செய்யும் குப்பையின் அளவு | 750 |
| | **மொத்தம்** | **7000** |

சராசரியாக நாள் ஒன்றுக்கு 7 மெட்ரிக் டன் அளவிற்கு திடக்கழிவுகள் சேகரம் செய்து அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர வாரச்சந்தை வாரம் ஒரு முறை 2 டன் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது.

## மழை நீர் வடிகால்

இந்நகராட்சிப்பகுதியில் பாதாள சக்கடை திட்டம் இல்லை. **மழைநீர்** வடிகால் வசதி செய்யப்பட்டுள்ளது. 46.25 கி. மீ அளவிற்கு வடிகால் வசதி செய்யப்பட்டு வாரம் இரண்டு முறை சுழற்சி முறையில் பராமரிப்பு செய்து வடிகால் அடைப்பு நீக்கம், தூர் வருதல் போன்ற பணி செய்யப்பட்டு வருகிறது.

## கழிப்பிடம்

புன்செய் புளியம்பட்டி நகராட்சிப்பகுதியில் 11 சமுதாய கழிப்பிடம், 4 பொது கழிப்பிடம் உட்பட அனைத்து கழிப்பிடமும் தினசரி 2 முறை சுத்தம் செய்து அமைந்துள்ளது. மேற்படி பொது கழிப்பிடம் நல்ல முறையில் பராமரிப்பு செய்து சுத்தமாகவும், சுகாதாரமான முறையில் பொது மக்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் உலர் கழிப்பிடம் ( Dry Latrine) இல்லை என்பதால், மனித மலம் மனிதனே அகற்றும் நடைமுறை முற்றிலும் ஒழிக்கப்பட்டுள்ளது

## பிறப்பு இறப்பு பதிவு

புன்செய் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 30 பிறப்பும் 180 இறப்பும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது முற்றிலும் கணினி மையமாக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சியில் 1924 முதல் பிறப்பு பதிவேடும் 1911 முதல் இறப்பு பதிவேடும் பராமரிப்பு செய்து சான்று கணினியில் வழங்கப்பட்டு வருகிறது.

## கொசு தடுப்பு முறை

புன்செய் புளியம்பட்டி நகராட்சி பகுதியில் கொசு தடுப்பு **பிரிவில் 10** தனியார் ஒப்பந்த கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு Abate, கொசு புழு மருந்து தெளிப்பு பணியும், முதிர் கொசுக்களை கட்டுப்பபடுத்த பைரித்திரம் கொண்டு புகை தெளிப்பு பணியும் **மழைநீர் கால்வாய்களில் உருவாகும் புழுக்கான BT மருந்து மூலம் ஒழிக்கும் பணியும் நடைப்பெற்று வருகிறது.**

## தொழில் கூடங்கள் மற்றும் நிறுவனங்கள்

இந்நகராட்சி எல்லைக்குள் ஐந்து தனியர் நூற்பாலைகளும் 620 வணிக கடைகளும் உள்ளது. இவற்றிக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண். 249, 251 அச்ச மற்றும் அருவருக்கத்தக்க தொழில் செய்வோர் என்ற முறையில் உரிய உரிமையாணக் கட்டணம் நகராட்சி மூலம் வசூல் செய்யப்பட்டு தொழில் நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## சந்தைகள்

புன்செய் புளியம்பட்டி நகராட்சியில் தினசரி சந்தை, வாரச்சந்தை என இரண்டும் செயல்பட்டு வருகிறது. தினசரி சந்தையில் தினமும் சராசரியாக 0.75 முதல் 1.00 மெட்ரிக்டன் திடக்கழிவுகள் தினமும் மதியம் சேகரம் செய்து அப்புறப்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு புதன் மற்றும் வியாழக்கிழமை தோறும் வாரச்சந்தை செயல்படுகிறது. இதில் தானியங்கள், காய்கறிகள், மளிகைப்பொருட்கள், இறைச்சிக்கடைகள் என அனைத்தும் சந்தையில் கிடைக்கும். இதில் ஆடு, மாட்டு சந்தையும் செயல்படுகிறது. இங்கு வாரம் ஒரு நாள் 2 மெட்ரிக் டன் திடக்கழிவு உருவாகிறது. இதை வெள்ளிக்கிழமை கூட்டு துப்புரவு பணி மூலம் சேகரம் செய்து அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

## போக்குவரத்து

போக்குவரத்துப் பேருந்துகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தினாலும், மற்றும் தனியார் துறையினராலும், நடத்தப்பட்டு வருகின்றது. இந்நகருக்கு நகரைச் சுற்றி உள்ள அனைத்து கிராமங்களுக்கும், முறையான வழித்தடங்கள் வாயிலாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றது. இது தவிர கர்நாடக அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளும், இந்நகர் வழியாக செல்கின்றன. சுமார் 154–க்கும் மேற்பட்ட பேருந்துகள் தினசரி இந்நகர் வழியாக இந்நகராட்சி பேருந்து நிலையத்திற்கு வந்து செல்கின்றன.

## வாராந்திர சந்தை

இந்நகராட்சிக்குச் சொந்தமான 20 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் வாரச்சந்தை நகராட்சியின் பராமரிப்பில் இயங்கி வருகிறது. இச்சந்தையானது தென்னிந்தியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய சந்தையாகும். இது ஒவ்வொரு புதன் மற்றும் வியாழக் கிழமையன்று இயங்கி வருகிறது. இச்சந்தையில் பொது மக்களின் நலனுக்காக நவீனக் கழிப்பிடங்கள் முழுமையான தண்ணீர் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் சந்தை நுழைவு வாயில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை பொது ஏலத்தில் விடப்பட்டதில், ரூ.44,48,588/–ம் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

## தினசரி சந்தை

இந்நகராட்சி பேருந்து நிலையத்தின் கிழக்குப் பகுதியில் தினசரி சந்தை அமைந்துள்ளது. அதனை அறிக்கையாண்டில் பொது ஏலத்தில் விடப்பட்டதில், ரூ. 8,03,475/–ம் வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

## ஆடுவதைச்சாலை, ஆட்டிறைச்சிக் கடைகள் (ம) கோழி இறைச்சிக் கடைகள்

இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன ஆடுவதைச் சாலை வாரச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ளது. அதன் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ.3,16,000/– வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

## ஜவஹர் தெரு மெயின் ரோடு கடைகள்

இந்நகராட்சிக்குட்பட்ட ஜவஹர் தெரு மெயின் ரோட்டில் மொத்தம் 27 கடைகள் உள்ளது. அதன் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ.30,62,905/– வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

## எம். ஜி. ஆர். வணிக வளாக கடைகள்.

இந்நகராட்சிக்கு சொந்தமான பகுதியில் எம்.ஜி.ஆர். வணிக வளாகத்தில் மொத்தம் 15 கடைகள் உள்ளது. அதன் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ.23,31,996/— வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

## மறைமலையடிகள் தெரு வணிக வளாக கடைகள்

நகராட்சிக்குட்பட்ட மறைமலையடிகள் தெருவில் மொத்தம் 4 கடைகள் உள்ளது. அதன் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ.89,049/— வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

## திரு.வி.க.திடல் வணிக வளாக கடைகள்

நகராட்சிக்கு சொந்தமான திரு.வி.க.திடல் வணிக வளாகத்தில் மொத்தம் 8 கடைகள் உள்ளது. மேற்கண்ட கடைகளின் வாயிலாக அறிக்கையாண்டில் ரூ. 12,83,834/— வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது.

## வாரச்சந்தை வணிக வளாக குடோன்கள்

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையின் முன்புற பகுதியில் 8 குடோன்களும், 1 மாடிப்படி கடையும் அமைந்துள்ளது. மேற்கண்ட குடோன்களுக்கு அறிக்கையாண்டில் ரூ.8,13,936/— வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

## கட்டணக் கழிப்பிடங்கள்

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட விவரப்படி உள்ள கட்டணக் கழிப்பிடங்கள் இயங்கி வருகிறது.

1.திரு.வி.க.திடல் கட்டணக் கழிப்பிடம் 1 எண்ணிக்கை அறிக்கையாண்டில் ரூ. 2,64,600/— வருமானம் கிடைக்கப்பட்டது.

2.வாரச்சந்தை கட்டணக் கழிப்பிடம் 1 எண்ணிக்கை அறிக்கையாண்டில் ரூ. 44,100/— வருமானம் கிடைக்கப்பட்டது.

3. பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் ஒரு எண்ணிக்கை அறிக்கையாண்டில் ரூ.9,00,000/— வருமானம் கிடைக்கப்பட்டது.

மேற்கண்ட கட்டண கழிப்பிடங்களின் வாயிலாக அறிக்கையாண்டில் மொத்தம் ரூ.12,08,700/— வருமானமாக வரப்பெற்றுள்ளது.

## திருமண மண்டபம்

நகராட்சி திருமண மண்டபம் மிகவும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலை உள்ளதால், வாடகை வசூல் செய்யப்படுவதில்லை.

## சமுதாயக் கூடம்

நகராட்சிக்கு சொந்தமான சமுதாயக்கூடம் ஒரு நாள்.1880/– ஆகும். 2023 – 2024 ம் ஆண்டில் 12 முறை வாடகைக்கு விடப்பட்டுள்ளது. எனவே அறிகையாண்டில் சமுதாயக்கூட மொத்த வருமானம் ரூ.22,560/– ஆகும்.

## பூங்கா

நகராட்சி அலுவலக வளாகத்தில் ஒரு பூங்கா பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

## நகரமைப்பு

2023–24–ம் ஆண்டில், கீழ்காணும் விபரப்படி கட்டிடம் கட்ட அனுமதி மனுக்கள் வரப்பட்டு, முடிவெடுக்கப்பட்டுள்ளன.

| | | நடவடிக்கை | நிலுவை |
|---|---|---|---|
| 1) 1.4.2023 –ஆம் தேதி நிலுவை | – | - | - |
| 2) நடப்பு ஆண்டில் வரப்பெற்றது | – | 34 | - |
| 3) உரிமம் வழங்கப்பட்டவை | – | 34 | - |
| 4) உரிமம் மறுக்கப்பட்டது | – | – | - |
| 5) 31.3.2024–ம் தேதியில் நிலுவை | – | – | - |

# பொது வருவாய்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு வரிகள் விதிக்கப்பட்டு இருந்தன.

**2023– 2024 ம் நிதியாண்டில் புதிய வரிவிதிப்புகள் எண்ணிக்கை – 223, கேட்பு ரூ. 9,37,808/– ஆகும்.**

**வருவாய் கணக்கு வரி விகிதங்கள்**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் கீழ்க்கண்டவாறு அரை ஆண்டிற்கு 10% வரி விதிக்கப்பட்டது.

| | **வரியின் வகை** | **அரையாண்டுவரி** |
|---|---|---|
| 1. | பொதுக் காரியங்களுக்கு வரி | 3 சதவிகிதம் |
| 2. | தண்ணீர் வரி | 2 சதவிகிதம் |
| 3. | சாக்கடை வரி | 1 சதவிகிதம் |
| 4. | கழிப்பிட வரி | 2 சதவிகிதம் |
| 5. | விளக்கு வரி | 2 சதவிகிதம் |
| 6. | கல்வி வரி | – |
| | மொத்தம் | 10 சதவிகிதம் |

சொத்துவரி விதிப்பில் ஏனைய வரித் தொகையில் 10% சதவிகிதம் நூலக வரியாக சொத்துவரியுடன் வசூல் செய்யப்பட்டு நூலக ஆணைக்குழுவிற்கு செலுத்தப்பட்டு வருகிறது.

**தொழில்வரி திருத்தம்**

தமிழ்நாடு அரசு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதறை உத்திரவு எண்.11 நாள் 12.1.1999–ல், 1992–ஆம் ஆண்டில் தொழில்வரி விதித்தல் மற்றும் வசூல் கட்டணத்தை திருத்தம் செய்து புதிய தொழில்வரி விதிப்பது மற்றும் வசூல் செய்வது தொடர்பாக 1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகளின் சட்ட பிரிவின்படி 2013–14 II முதல் 2018–2019 வரையுள்ள தொழில் வரித்தொகையில் 25% 2018–19 – II முதல் உயர்வு செய்து நகர்மன்ற தீர்மான எண். 816 நாள். 14.05.2018–ம் தேதியில் அனுமதி அளிக்கப்பட்டது. இந்த புதிய தொழில்வரி விகிதம் 1.10.2018 முதல் அமுலுக்கு வரப்பட்டு 2023–24 –ம் ஆண்டிற்கு அரசு மற்றும் வணிக நிறுவனங்களின் வசூல் ரூ.13,04,000/– வசூலிக்கப்பட்டுள்ளது.

**கேட்பு விபரம்**

| | சொத்துவரி (ரூ. லட்சத்தில்) | காலியிட வரி | தொழில்வரி | தண்ணீர் கட்டணம் | வரியில்லா இனம் |
|---|---|---|---|---|---|
| 1. கேட்பு | 178.32 | 16.72 | 13.04 | 71.35 | 169.95 |
| 2. வசூல் | 166.70 | 8.00 | 13.04 | 70.85 | 158.97 |
| 3. தள்ளுபடி | – | – | – | - | – |
| 4. அதிகப்படி வசூல் | – | – | – | - | – |
| 5. நிலுவை | 11.62 | 8.72 | 0 | 0.50 | 7.98 |

நிலுவைத் தொகைகள் பெரும்பாலும் அரசுக் கட்டிடங்கள் மீதான சொத்துவரியாகும். நிதி நிலைமையைப் பெருக்க நிலுவை முழுவதையும் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 அட்டவணை 4–ல் விதி 20(1)–ல் குறிப்பிட்டுள்ளபடி அதிகபட்ச வரி விதிக்கப்படுகிறது.

2023–2024 புன்செய் புளியம்பட்டி நகராட்சியில் வரப்பெற்ற வரவு மற்றும் செலவு விபரங்கள் பின்வருமாறு.

| வ. எண். | **வரவு** | ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1 | சொத்துவரி மூலம் | 166.70 |
| 2 | கட்டணங்கள் | 159.17 |
| 3 | சேவை வரி மற்றும் கட்டணங்கள் | 198.01 |
| 4 | விற்பனை மற்றும் வாடகை கட்டணம் | 13.69 |
| 5 | இதர வரவுகள் | 22.56 |
| | **மொத்தம்** | **558.93** |

| | செலவு | |
|---|---|---|
| 1 | பணியாளர்கள் செலவு | |
| | அ) ஊதியம் | 255.06 |
| | ஆ) மற்றவை | – |
| 2 | ஓய்வூதிய பயன்கள் | 60.70 |
| 3 | இயக்கச் செலவுகள் | 17.18 |
| 4 | பழுது மற்றும் பராமரிப்பு செலவுகள் | 182.68 |
| 5 | திட்டச் செலவுகள் | 64.08 |
| 6 | நிர்வாகச் செலவுகள் | 22.75 |
| 7 | நிதி செலவு | 61.17 |
| 8 | தேய்மானம் | 277.43 |
| | **மொத்தம்** | **941.05** |

**பொது**

அறிக்கையாண்டில் நகராட்சி எல்லையில் யாதொரு மாறுதலும் இல்லை. நகராட்சிக்கு வரவேண்டிய வரி இனங்கள் வரியில்லாத இனங்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள இனங்கள் நீங்கலாக பாக்கியின்றி வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டது. நகராட்சி சாலைகள் நல்லமுறையில் பராமரிக்கப்பட்டது. இந்நகராட்சி வருவாய் நிதியை பெருக்கும் வகையில் வரியினங்கள் மற்றும் வரியில்லா இனங்களில் கூடுதல் செயல் திட்டங்கள் நிறைவேற்றிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் மற்றும் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், திருப்பூர் அவர்கள் ஆகிய உயர் அலுவலர்களால், அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகளை பின்பற்றி நகராட்சி நிர்வாகம் நல்ல முறையில் மேம்படுத்தப்பட்டு வருகிறது. பொதுவாக **2023–24** ஆம் ஆண்டு நகராட்சியின் செயல்பாடுகள் சிறப்பானதாக அமைந்தது.

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.